Name of the Newspaper ... DINAMALAR ... Date: 10-1-11

# ஈக்காட்டுத்தாங்கலில் அமைகிறது மெட்ரோவின் 9 மாடி வணிக வளாகம்

– நமது நிருபர் –

சென்னை, ஈக்காட்டுத் தாங்கலில், ஒன்பது மாடிகள் உடைய அலுவலகம் மற்றும் வணிக வளாக கட்டடம் கட்ட, சி.எம்.டி.ஏ., அனுமதிக்காக, மெட்ரோ ரயில் நிறுவனம் காத்திருக்கிறது.

சென்னையில், மெட்ரோ ரயில் போக்குவரத்து துவங்கிய வழித்தடத்தில், காலி நிலங்களை, வணிக ரீதியாக மேம்படுத்தும் திட்டங்களை, மெட்ரோ ரயில் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

அரும்பாக்கம், ஈக்காட்டுத்தாங்கல், கோயம்பேடு, அசோக் நகர், ஆலந்துார் ஆகிய இடங்களில், காலி மனைகளில், அடுக்குமாடி வளாகங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து, சி.எம்.டி.ஏ., உயரதிகாரிகள் கூறியதாவது:

பரங்கிமலை – கோயம்பேடு வழித்தடத்தில், கையகப்படுத்தப்பட்ட நிலங்களில், மெட்ரோ ரயில் நிறுவனம், அடுக்குமாடி வணிக வளாகங்களை கட்ட திட்டமிட்டுள்ளது.

இதில், ஈக்காட்டுத்தாங்கல் பகுதியில் உள்ள மனையில், இரண்டு அடித்தளம், தரை தளத்துடன், ஒன்பது தளங்கள் கொண்ட அலுவலக மற்றும் வணிக வளாகம் கட்டப்பட உள்ளது.

இதற்கு, திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலம் தொடர்பான விதியில், மாநகராட்சியிடம் தடையின்மை சான்று பெற வேண்டியுள்ளது. இத்திட்டத்துக்கு விரைவில், அனுமதி வழங்கப்பட உள்ளது.

இதே போன்று, அரும்பாக்கத்தில் மூன்று தளங்கள் கொண்ட, இரண்டு வணிக வளாகங்கள்; கோயம்பேட்டில் ஒரு தளம் கொண்ட வணிக வளாகம் அமைய உள்ளது.

ஈக்காட்டுத்தாங்கலில், ஆம்வே கடை அருகில் உள்ள மனை, அசோக் நகர், ஆலந்துார் ஆகிய இடங்களில் உள்ள மனைகளில், தரைதளம் மட்டும் உடைய வணிக வளாகம் கட்டப்பட உள்ளது.

இதற்கான, திட்ட அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகள், இறுதி கட்டத்தில் உள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.